# திருமணமும்; விருந்துகளும்!

உலகம் முழுமைக்கும், திருமணம் என்பது, ஒரு சிறப்பித்த நிகழ்வாகவே நிகழ்த்தப் படுகிறது. நிகழ்வைச் சிறப்பிக்க வந்தவர்களுக்கு, அமுது படைத்தல் என்பது ஒரு செவ்விய நிகழ்வாக, விருந்தோம்பலாக நிகழ்த்தப் படுகிறது. எல்லா நாடுகளிலும், அஃது உண்டென்றாலும், நம் நாட்டில், அதுவும் தென்புலத்தில் தமிழ் நாட்டின் கண் ஒரு சீரிய நிகழ்ச்சியாகும்.

1970 தொடங்கிதான், மண்டபம் சார்ந்து, திருமணம் நிகழ்த்தும் நிலை பரவலாகத் தொடங்கியது. அது வரை, அவரவர் தம் வாழ்விடமாகவே அமைந்திருந்தது. மூன்று நாட்களோ அதற்கு மேலாகவோ நடந்த நிலையும், உறவுகள் கூடி செயல்படுத்துவதுமாகவும், பெரும்பாலும், உறவின் முறைகளுக்குள்ளேயே திருமணம் அமையும். மண்டபங்கள் அமையத் தொடங்கிய பின்பு, ஒன்றரை அல்லது இரண்டுநாட்கள் என்பது, 24 மணிநேரமாகிய பின்பு, மாலை நான்கு மணியிலிருந்து மறுநாள் நான்கு மணிவரை, என்றானது. இன்னும் சிலர், நள்ளிரவிலிருந்து நாட்கணக்கைத் தொடங்குதல் நடைபெறுகிறது. சூரிய உதயத்திலிருந்தே நாள் தொடங்குகிறது எனும் தமிழ் மரபை, அவர் சிந்திப்பதில்லையோ என்னவோ!

அன்மைக் காலம் வரை அகண்ட தஞ்சைமாவட்டதில், திருமணத்தில், உண்ணலாம் என, விருந்துக்கு அழைத்தால் மட்டுமே செல்வர். சென்னையம் பதியில், துரித இயங்கு நிலை காரணமாக, அத்தகைய எதிர்பார்ப்பு என்றுமே இருந்ததில்லை என்பர்! உடுமலைப்பேட்டையை பூர்வீகமாக, சென்னையை பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்ட என் நண்பர் திரு தாஹிர் பாஷா சொல்வார்; சென்னை மக்கள் தான், உண்மையான வெள்ளந்தியானவர்கள். வருவார்கள், கட்டாயம் மொய் எழுதுவர். பின்பு விருந்துண்டு செல்வர் என்று.

நினைவு தெரிந்த நாளிலிருந்து, ஒரு விழா நிகழ்வில், விருந்து நடைபெறும் போது, அம்ர்ந்து இலையிட்ட பின்பு, நீர் தெளித்தே, பதார்த்தங்களை இலையில் இடுவர். அவ்வரிசையில், ஏதேனும் ஒரு முதியவர் அமர்ந்து இருப்பார். அவர் உண்ணலாம் என்று சொல்லியபின் தான் உண்ணத்தொடங்குவர். ஒவ்வொன்றாக வரிசையாகத்தான் பறிமாறப்படும். ஏதோ ஒன்று வேண்டாமெனில், அடுத்து உள்ளது வரும் வரைக் காத்திருக்கத்தான் வேண்டும். அதே போல் , உண்டு முடித்த யாவரும் எழ மாட்டார்கள். அந்தப் பெரியவர், அனைவரும் மோர் இட்டு உண்டு முடித்த பின்னரே எழலாம் எனக் கூறுவார். இந்நிலையில், 4 அல்லது 5 வயதுடைய சிறுவனோ சிறுமியோ பந்தியில் இருந்தால், அவர்கள் உண்டு முடிக்கும் வரை யாவரும் காத்திருக்கும் நிலை இருக்கும். பதார்த்தங்கள் கூட பெரும்பாலும், சின்னஞ்சிறியவர்களாலும் வீணடிக்கப் படாது.

அந்தப் பந்தியை, வரிசையை, பார்க்கும் பெரியவர், அகவையில் மூத்தவர் எனும் தகுதி மட்டுமே கொண்டு, செயல் படுவார். இன்று இலையில் இடப்படுவதில் அன்னம் முதற்கொண்டு, யாவுமே வீணடிக்கப் படுகின்றன. 15 வகை, 18 வகையென போட்டிப் போட்டுக் கொண்டு சமையல் செய்கின்றனர். பறிமாறிய பின் அமர்வதால், பெரும்பாலும், பந்தியில் ஒழுங்குமுறை ஏதும் கடைபிடிக்கப் படுவதில்லை யாதலால், சிலர், காலம் கருதி, அடுத்து அடுத்து உள்ளவர் எழுந்து விட்டதால், பின்னொருவர் காத்திருப்பதால், உண்ண இயலாமல் செல்லும் நிலையும், அவருக்கு ஒவ்வாதவையும், பிடிக்காதவையும் இருப்பதால், அப்படியே வைத்து விடுகின்றனர். அவற்றைக் காகிதத்தோடு சுருட்டி குப்பையில்தான் இடுகின்றனர். வெறும் இலையாக சுருட்டி எறிந்தால் மாடுகள் உண்ணும் நிலை உண்டாகும். அங்கு மாடுகள் இருக்க வேண்டும். சிலசமயம், நாய்கள் தனக்குரியன உண்டோ எனத் தேடும் போதில், மாடுகளுக்கும் விருந்தாகும். அதனைத் தேடியுண்ணும் மனிதப் பிறவிகளும் மண்ணில் உண்டு என அறியும் மனிதர்தான், உணவை விரயம் செய்கின்றனர்.

அமர்ந்த பின்பு பறிமாறத் தொடங்கினால், தேவையற்றவனவற்றை விலக்கும் வாய்ப்பு உண்டாகும். அப்படியும் சிலர் விரையம் செய்கின்றனர். பஃபே எனப்படும் விரும்பியதை மட்டும் உண்ணும் நிலையில் கூட வாங்கி விரையம் செய்கின்றனர். அன்மையில் ஒரு திருமண விருந்தில், தேவையானதை வாங்கி யுண்ணும் நிலையில், இடியாப்பத்தை வாங்கி ஒருவர், உண்ணாமலேயே, தட்டை கீழே வைத்திருந்தார். அது எந்த தீங்கும் விளைவிக்காத உணவு அல்லவா?. அதில் என்ன ஒவ்வாமையோ?

நண்பர் ஒருவரது, பெயரக் குழந்தைகளின் (இரட்டையர்) முதலாம் பிறந்தநாளுக்கு அழைத்திருந்தார். நீண்ட நாட்கள் குழந்தை இல்லாதிருந்த அவர் மகனுக்கு, அவரது பிரார்தனைக்குச் செவிமடுத்த இறைவன், என் மூலம் அவருக்கு பரிகாரம் சொல்லும் நிலையை நல்கியதால், எனது, வருகையும் வேண்டும் என அவர் நினைத்தார். பெரிய உண்டிச்சாலையில் நிகழ்வு. பாட்டும் கூத்தும், ஆக அற்புதம். அங்கு மரக்கறி உணவைத் தேடி உண்ணலே பெரும் பாடாயிருந்தது.

யாவும் இறைவன் திருச்செயல்களே என எண்ணும் ஒரு சராசரி வைணவன் தான் யான். ஆகையால், கோபம் ஏற்படும் போதெல்லாம் வெளிப்படுத்துவதில்லை. இந்த இயக்கம் ஏதோ ஒன்றை நோக்கி இயங்குகிறது. அறிகிறோமோ இல்லையோ நாமும் ஓட வேண்டும் எனும் நிலைப்பாடு உண்டு. சில ஆண்டுகள் முன் என்னுடைய மூத்த மகன் திருமணத்தின் போது, காலையுணவு, நான் எனது, சகலர், என எங்கள் குடும்பத்தார், 7 அல்லது 8 பேர் உண்ணச் சென்றோம். 10,12 இலைகளுக்கு மேல் உணவு பறிமாறிய நிலையில் இருந்தது. எங்கள் அனைவருக்கும் உணவை வீணடித்தல் கூடாது எனும் நிலைப்பாடு இருந்ததோடு, நாங்களும் வேளாண்மை செய்து, வாழ்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள். நாங்கள் உண்ணத் தொடங்கிய பின்னும் பரிமாறிய நிலையில், 4 அல்லது 5 இலைகள் உண்பதற்கு தயாராய் இருந்தது. இந்நிலையில், உண்ண வந்த தலைமைச் சமையல் கலைஞர், தனியே ஒரு புதிய

இலையைப் போடச் செய்து, புதியதாகப் பறிமாறச் செய்து, உண்ணத் தொடங்கினார். அவர் தனது உழைப்புக்கும் மரியாதையைத் தரவில்லை. அந்த உணவுக்கும் மரியாதையைத் தரவில்லை. அது எனது கோபத்தைக் கிளறி விட்டு விட்டது. முதல்நாள் இரவும், நான், நண்பர்களுடன் உண்ணச் சென்றபோது, காய்ந்து விரைத்த இலையில்தான் உண்ண வேண்டியதாயிற்று. இங்கு ஒன்றைப் பதிவு செய்ய விழைகிறேன். நேரம் செல்லச் செல்ல, தேவைக்கு ஏற்ப பறிமாறினால் என்ன? இதையெல்லாம், திருமணம் செய்பவர்கள் (திருமண வீட்டுக்காரர்கள்) காண இயலுமா? அந்தச் சமையல் கலைஞர் நாகையிலே மிகவும் பிரபலமானவராம். விருந்தினர்களை சிறுமை படுத்துவதாகவே பட்டது அந்தச் சமையல் கலைஞரின் செயல். இன்றைக்கு பல இடங்களிலும் இதே நிலைதான். நாலுபேர் பாதி உண்ணத் தொடங்கியதும், சிலர் அமர்வர். யாவும் பறிமாறிய நிலையில், கடைசியில் அமர்பவர், உண்டும் உண்ணாமலும் ஓட வேண்டிய நிலை. சில சமயம், இடையில் ஓர் இலை உண்ணாமலேயே குப்பைக்குப் போகும்.

சிறப்பாகப் பேசப் பட்ட நமது முறை யெல்லாம் இன்று கேலிக் கூத்தானது. குஜராத்திகள், நம்மைப் பார்த்து கற்றுக் கொண்டு, விரையம் செய்யாது, உண்ணும் நிலையை உண்டு பண்ணுகின்றனர். நமது பந்திகளில், ஒருவர் பருப்புசாதம் உண்டு முடிக்கும் முன்னே இன்னொருவர், மோர் கேட்பார். முன்பெல்லாம், யாவும் வரிசையாகத் தான் பறிமாறப்படும். தென்னிந்தியர் இடக்கையால் உணவைத்தொட மாட்டார் எனும் வரலாற்றுப் பதிவும் உண்டு!

மீதம் வைக்காமல் உண்ணுதல், என்பது இன்று அநேகமாகப் பெரும் பாலோரிடம் காணப் படுவதில்லை. தட்டில் வாங்கியே மீதம் வைக்கும் போது, இலையில் வைப்பதைக் கேட்பானேன். அகவை அதிகமான பின்பு, அளவில் கட்டுப்பாடு செலுத்தும் நான், தேவைக்கு மேல் பெறுவதில்லை. இலையில் ஒரு பருக்கை கூட மீதம் வைக்காமல் உண்ணும் பழக்கம் உடைய என்னை பலரும் கேலிக்கையாகப் பார்ப்பர். என்றும் மனம் வருந்தியதில்லை. எந்தையாரும் அங்ஙனம் உண்பார். என் தாய்வழிப் பாட்டனாரும் அங்ஙனம் உண்ணக் கண்டிருக்கிறேன். என் மக்கள் இருவரும் அவ்வாறே பழக்கம் கொண்டுள்ளனர். சில தினங்கள் முன்பு, ஒரு நிகழ்வில், ஒரு கிராமத்தில் மதிய உணவு. உண்டு முடித்திருந்தேன். வழித்துவிட்ட இலையில், ஓரிரு ஊறுகாய்த் துண்டுகள்(செவி சாய்க்காமல் அதிகம் பறிமாறிவிட்டனர்). தம்பி திரு. கபிலனுக்காகக் காத்திருந்தேன். பறிமாறியவர்கள், அந்த சில மணித்துளிகளில் தொடர்ந்து வந்து, சாதம், வேறு என்ன வேண்டும் எனக் கேட்டனர். இலை காலியாக இருந்ததில் அவர்கட்கு ஐயம். ஏனெனில், அங்கும் பலர் கேட்டு பறிமாறிய உணவை இலையில் விட்டிருந்தனர்.

அந்நாளில், திருமண வீட்டில், அல்லது மண்டபத்தில், இரவில் சீட்டாடுத்ல், சினிமா செல்லுதல், ஆகிய செயல்கள் இருக்கும். பொது நிகழ்ச்சி அல்லது குடும்ப நிகழ்ச்சி என்னும் மன நிலையில் அனைவரும் பங்கு கொண்டனர். கேலியும் கிண்டலும்

நிரம்பியதாக, பேச்சும் செயல்களும் அமையும். அனைவரும் மண்டபத்திலேயே தங்குவர். இன்று, பெண் மாப்பிள்ளை அவர்தம் தாய் தந்தையர் தவிர யாரும் மண்டபத்தில் தங்குவதில்லை. அருகில் ஏதேனும் விடுதிகளில் தங்கவே விழைகின்றனர். இந்நிலையில் சிலர் திருமண நிகழ்வில் முழுமையாகப் பங்கு கொள்வது கூட இல்லை. இம்மாதிரியான குடும்ப நிகழ்வுகளில், ஒருவரை யொருவர் பார்த்து, நலம் கேட்டு, மகிழ்ந்திருந்த காலமெல்லாம் மலையேறி விட்டது. எந்தையார் அவர் திருமணம் குறித்துக் கூறியதை, ஈண்டு பதிவிட விழைகிறேன். அறுபது ஆண்டுகளுக்கு முன் என் தாய்வழிப் பாட்டனார் வீட்டில், ஒரு குக்கிராமத்தில் நடந்த திருமண நிகழ்வில், பங்கு கொண்டவர் நால்வர். இருவர் அவரது, அத்தையின் பெயரனும், அத்தைப் பெயர்த்தியின் கணவரும் ஆகும். மற்ற இருவரும் நெருங்கிய நண்பர்கள். அனைவரிடத்தும் கார் இருந்தது. வீட்டில் இருந்துவிட்டு, அல்லது, இரவு வீட்டுக்குச் சென்றுவிட்டு, விடியற்காலை காரில் வந்திருக்கலாம். ஆனால், அங்கேயே, மாப்பிள்ளை ஜாகையில் தங்கி, அவ்வூர் குளத்தில் குளித்து (கினற்றிலும் குழாயிலும், குளியலறையில், குளிக்கப் பழக்கம் கொண்டவராய் மாறியவர்கள்), திருமணத்தில் பங்கு கொண்டிருந்திருக்கிறார்கள். **நட்பும் உறவும் அவ்வாறு பேணப் பட்டுள்ளது.**

இவற்றையெல்லாம், காலத்தின் மாறுதல் என எண்ண வேண்டுமா எனத் தெரியவில்லை. இனி திருமணத்தைப் பதிவு செய்து விட்டு, மதிய விருந்தோ அல்லது மாலை விருந்தோ ஒரு உண்டிச் சாலையில் வழங்கிவிடலாம். தற்போது, சிலர் உண்டிச் சாலைகளில் (ஹோட்டல்) திருமணம் செய்கின்றனர். மண்டபம் முதலான வசதிகள் அங்கும் கிடைக்கின்றன. அங்கு காணப்படும் ஒன்று, அந்த உண்டிச்சாலையின் ஊழியர்களுக்கு, வந்திருப்பவர்கள் விருந்தினர் அல்ல. இலையை அல்லது தட்டை எண்ணி காசு பெற முதலாளிக்கு உதவுவதே அவர்தம் கடன். ஆகையால், அவர்கள், கண்ணில் படும் போதோ, அல்லது, தேவையானது வைக்கப் பட்டிருந்தாலோ தான் உண்ண முடியும். அவர் கேட்பதைச் சொல்வாரும் இல்லை, சொல்வதைக் கேட்பாரும் இல்லை. அவையாவும் பெரும்பாலும் நட்சத்திர அந்தஸ்து உடையவை ஆகையால், சிப்பந்திகள், தங்களது ஆடைக்குத் தரும் முக்கியத்துவத்தை, உணவுக்கும் பறிமாறுதலுக்கும் வழங்க மாட்டார்கள். அங்கு இன்று, திருமண உறுதிப்பாடு (நிச்சயதாம்பூலம்), பிறந்தநாள் விழாக்கள் முதலியனவும் நிகழ்த்தப் பெறுகின்றன.

சில பல, ஆண்டுகளுக்கு முன் ஒரு நிச்சயதார்த நிகழ்வில், அளவுக்கதிகமாகத் தேவைபட்டது தயிர்சாதமே. நட்சத்திர அந்தஸ்து உண்டிச்சாலைக் காரர்கள் பெரும்பாலும் தயிர்சாதத்துக்கு முன்னுரிமைத் தரமாட்டார்கள்.

**இருந்த ஒரு சீரிய நிலையை, விருந்தோம்பலைக் கலையாகப் போற்றியதை இன்று ஏதோ ஒன்றாய் நிகழ்த்தத் தொடங்கி விட்டோமே எனும் வருத்தமே இப் பதிவு.** —0—

**கு.ப. அசோகன்**